DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 681/2025

List of Witness : Lw3

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சரவணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வேலுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 30/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் முத்தனம்பட்டியில் குடியிருந்து எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. திண்டுக்கல் – பழனி ரோட்டில் விபத்து ஒன்று ஏற்பட்டது என்று எனக்கு எங்கள் ஊர்க்காரர்கள் தகவல் சொன்னார்கள். வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 25.09.2021 ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த காளிதாஸ் என்பவர் முத்தனம்பட்டி கவுண்டர் டீ கடை அருகே இருந்த போது திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் மெயின் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 57 AM 9388 பேசன் ப்ரோ இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த குட்டத்து ஆவரம்பட்டியை சேர்ந்த வெள்ளையன் மகன் ஆறுமுகம் என்பவர் தனக்கு பின்னால் தனது மனைவி அபிராமி என்பவரை உட்கார வைத்துக கொண்டு முத்தனம்பட்டி கவுண்டர் டீக்கடை முன்பு ரோட்டின் இடது ஓரமாக ஓட்டிவந்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் TN 38 CL 6671 என்ற எண்ணுள்ள யமகா இசட் இருசக்கர

வாகனத்தை அதன் ஓட்டுநர் ஈரோடு மாவட்டம், செல்வராஜ் மகன் பாலகிருஷ்ணன் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து ஆறுமுகம் என்பவர் வண்டி மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றும், இதை பார்த்தநாங்கள் ஓடிச்சென்று பார்க்க ஆறுமுகத்திற்கு உடம்பில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு இருந்ததுஎ ன்றும், ஆறுமுகத்தின் மனைவி சத்தம் போட்டு தனக்கு வலது கண்ணம், முதுகில் பின்புறம் வலி அதிகமாக இருப்பதாக சொன்னார் என்றும், உடனே அருகில் இருந்த நாங்கள் ஒரு போக்குவண்டியை பிடித்து ஆறுமுகம் மற்றும்அவரது மனைவி அபிராமி ஆகியோரை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம் என்றும், அபிராமி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்ததாக நான் கேள்விப்பட்டேன் எனவும், விபத்து சம்பந்தமாக ஆறுமுகம் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.30 17:12:49 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 30/06/2026